ஸ்ரீ



ஸ்ரீமதே ராமானுஜாயநம:

284
1-55
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
★ 12 JAN 1955
MADRAS

# ஸ்ரீமத் குசலவ ராமாயணம்

கோயமுத்தூர் தாலூக்கா பூளைமேட்டிலிருக்கும்

பூ. சா. கோவிந்தசாமி நாயுடு அண்டு சன்ஸ்

அறநிலயத்தார்களால்

ஷியார்கள் அச்சுயந்திரசாலையிற் பதிப்பிக்கப்பட்டது.

D-,1F6K,S
N55.

1954. விலை அணா 0-8-0

ஸ்ரீ



ஸ்ரீமதே ராமானுஜயநம:

★

# ஸ்ரீமத் குசலவ ராமாயணம்

கோயமுத்தூர் தாலூக்கா பூளைமேட்டிலிருக்கும்

**பூ. சா. கோவிந்தசாமி நாயுடு அண்டு சன்ஸ்**

அறநிலயத்தார்களால்

டையார்கள் அச்சுயந்திரசாலையிற் பதிப்பிக்கப்பட்டது.

**1954.**

O ,1FOK, S
N55

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 110068
EGMORE, MADRAS-600 008

ஸ்ரீராமஜெயம்

# ஸ்ரீ குசலவ ராமாயணம்.


---

## முகவுரை.

ஒட்டக்கூத்தர் பாடிய ராமாயண உத்தரகாண்டத்தில் அசுவமேதயாகப் படலத்தில் ஸ்ரீராமர் நைமசாரண்ணியத்தில் அசுவமேதயாகம் நடத்தும்போது சீதை மக்களாகிய குசலவர் கள் வால்மீகமகருஷி ஆசிரமத்தி லிருந்து முனிவர் வேடத்தில் வந்து வீணைகளை சுருதிவைத்து தேவகானம் செய்து பாடிய குசலவ ராமாயணம். இதில் ராமர் அவதாரம் முதல் ராமர் அசுவமேதயாகம் முடித்து அரசாட்சி செய்யும்வரை 182 கவி களில் அருமையாக பாடி யிருக்கிறார்கள். இதை ராமபக்தர்க ளெல்லோரும் எளிதில் பாராயணம் செய்யும் பொருட்டு பூ. சா. கோ. அண்டு சன்ஸ் தர்மஸ்தாபனத்தாரால் ஷியார் களது அச்சகத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

இப்படிக்கு

பூ. சா. கோ. வெங்கிடசாமி நாயுடு.



ஸ்ரீராம பட்டாபிஷேகம்

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

# ஸ்ரீமத் குசலவ ராமாயணம்

---

## பாயிரம்

### கடவுள் வணக்கம்.

வெள்ளியங்கிரியைமீதேவேரொடுமெடுத்தவீரக்
கள்ளவன்புயநாலைந்துங்கனகமாமவுலிபத்தும்
துள்ளியம்புவிமேல்வீழவொருகணைதொடுத்துவிட்ட
வள்ளலம்புயமேயன்னமலரடிவணக்கஞ்செய்வாம்.

### வேறு

### மெய்ப்பொருள் வணக்கம்.

ஒன்றாய்ப்பலவாயுளவாயிலாவாயுரைப்போர்க்
கன்றாகியாமாயருவாயுருவாகிமெய்ம்மை
குன்றாதஞானக்கொழுந்தாய்க்குணமூன்றிறந்து
நின்றானியாவனவனீள்கழனெஞ்சில்வைப்பாம்.

### அவையடக்கம்.

புன்சொற்களேனும்புதல்வன்குதலைச்சொறந்தை
இன்சொற்களாகக்கொளலான்முனியீங்குரைத்த
தென்சொற்றமிழும்வடசொற்றுறையுந்தெரிந்தோர்
என்சொற்கள்பொல்லாதெனினும்மிகழார்களன்றே.

இதுக்குத்தரமில்லையிராமகதைப்பரப்பை
நதிக்குத்தரமன்னதைநன்னெறியுய்ப்பதொன்றை
அதுக்குத்தரமில்லதையாய்ப்பொருளாயவாய
மதிக்குத்தரமன்னதைவாக்கினிற்கூறலுற்றேன்.

கால்காட்டவேகுநெறிகண்ணுடையோர்கண்முன்னே
போல்காட்டமெல்லக்குருடற்குநடக்கலாமால்
பால்காட்டுமின்சொன்முனிபாவழிகாட்டவேத
நூல்காட்டிராமன்கதைமேற்றமிழ்[1] நூற்கலுற்றேன்.

[2] மாத்திரைக்கடன்மண்ணோரைமனுமுதலாயதன்மம்
சாத்திரப்படிதப்பாமற்சரிப்பித்துச்சகலத்துக்கும்
நேத்திரமாகிநின்றோனெடுநிலைவாயில்காக்கும்
வேத்திரக்கரத்தோன்றன்னைவிளித்திவைவிளிம்பலுற்றான்.

எழுகதிரவன்பரியென்னவெண்ணிரு
செழுபரிகொணர்ந்தபின்றேவர்யாவரும்
தொழுபரிசுலகெலாஞ்சுருங்கவோடிடக்
கொழுகனகத்தினாற்குளம்புகட்டினார்.

*நீடியபதினறுமுனிவர்நீள்கடல்
†கோடியவுலகெலாங் ‡ குறையக்கூர்மறை
பாடியபதினறுபவளப்பச்சைமா
ஓடியவடிதொறுமோமம்பண்ணினார்.

நலங்கிளர்புவியெலாநடவிமீண்டபின்
உலங்கிளர்தோளினானுவப்ப § யூபத்தில்
வலங்கிளர்மரகதநிறத்ததான்மணி
இலங்குளைப்பரியெலாம்யாப்புறுத்தினார்.

---

1 நூற்கலுற்றேன் – செய்யத்தொடங்கினேன்.
2 மாத்திரைக்கடல் – பெரிய அலைகளையுடைய சமுத்திரம்.
* நீடிய – தவத்திலுயர்ந்த. † கோடிய – வளைந்த.
‡ குறைய – இடம்போதாதென்றுரைக்க.
§ யூபத்தில் – யாகப்பசுவைக்கட்டுந்தறியில்.

வரிந்தபைங்கழலினுன் மகிழ்மாதவர்
தெரிந்தமந்திரத்தினைச்செவியிற்செப்பிநின்
றரிந்தனரரிந்ததாரவனிசேப்புறச்
சொரிந்தன திசையெலாந்துளேந்தசோரியே.

※பருத்தடிதனையரிந்திட்டுப்பைம்புனக்
குருத்தழல்கொழுந்துவிட்டெரியக்கோதிலாக்
கருத்துடைமறையவர்கனிந்தகாகலால்
அருத்தினராவுதியமரர்தம்மையே.

வேறு

தேவர்கள் ¶ செல்லநீர்த்தவிராமன் முன்செய்தசெம்பொற்
பாவையைத்தனுவகத்துப்பாரியாச்சங்கற்பித்தும்
பூவையையனையதன்மைபுரோகிதன்சடங்குகாட்டத்
தூவருந்தவர்களோடுந்தொடங்கினான்வேள்வியென்ன.

வேறு.

வான்மீகி குசலவர்களை அழைப்பித்தல்.

இசைபுனையிராகவனினையவேள்விகள்
நசையுலவேட்குமங்நாளினண்டிறை
வசையறுமதூரவான்மீகிமன்னிய
குசலவர்வருகெனக்குறித்துக்கூறினான்.

குசலவர் வான்மீகியை வணங்கிநிற்றல்.

சுந்தரத்திருநிறத்தூயவெண்ணகைச்
சிந்துரப்பவளவாய்ச்சிவந்தவாள்விழிக்
கொந்தணிகுழற்குசலவர்கள்கோதிலார்
வந்தனர்முனிவனை வணங்கிமன்னினார்.

---

※ பருத்தடி – பரிய ஊன். ¶ செல்லல் – துன்பம்.

வான்மீகி குசலவர்க்கு நீவிர் இராமன்கேட்க இராமாயண மிசைத்திரெனல்

இடாறுமுனிவரனிகலிராகவன்
அடல்புனைந்தேத்தியவளவிலாதபோர்
*இடிமொழிக்காப்பியமதுரவின்னிசை
படாறுமரசவைபகர்திர்போயென்ருன்.

இராமன் முதலியோருக்குச் சீதை மக்களெனத் தெரியாம லுரைத்திரெனல்.

சந்தணியிருபுயச்சனகர்கோமகள்
மைந்தரென்றறிவுருவகைமறைந்துநீர்
அந்தணரிருந்துழியரசர்சேர்ந்துழிப்
†பைந்துவர்வாயினீர்பகர்திரென்றனன்.

வேறு

உழையிளிவிளரிதாரங்குரல்கிளைதுத்தமென்னும்
பழையனவிசைகளேழும்பான்மையிற்றெரியப்பண்ணுள்
‡இழுமெனவிசைக்குங்கோள்களேழவை § திவவுகாட்டி
மழவிடையனையநீரார்மாடகயாழ்கைக்கொண்டார்.

கனிதருபவளச்செவ்வாய்க்காமனுஞ்சாமன்ருனும்
முனிவர்தம்வடிவங்கொண்டமுறைமையதாகுமென்னப்
பனிமலர்வேணிசாத்திப்பருவரையருவிபோல
இனியவெண்புரிநூன்மார்பிலிலங்கிடவலங்கரித்தார்.

முனிவனைவணங்கிநீங்கிமுழுமலர்ப்பன்னசாலைச்
சனகியைவிடைகொண்டிப்பாற்றருமிசை ¶ வருடைபாயும்
பனிமலர்ச்சோலைநீங்கிப்பலவரியுழுவைக்காகக்
கனைகுரலுழைகண்டுஞ்சாக்கல்லதரத்தஞ்சேர்ந்தார்.

---

*இடிமொழி — உறுதிச்சொல். †பைந்துவர் — பசியசெம்மை.
‡இழுமென — விட்டிசைக்காத அருவியோசையையொப்ப.
§திவவு — வீணையின்கட்டு. ¶வருடரை — வரையாடு.

கானவரம்பைமாய்க்கும் * கல்லதாழுவநீங்கி
வானவரம்பைமாதர்மணிபயில்குறங்குபோல
வானவரம்பைநீத்துமலரயனுலகுசேரும்
கானவரம்பைசூழுங்கடிமணற்கங்கைசேர்ந்தார்.

பூத்தமின்கமலமீதுபொரியெரிப்பெய்தபோலக்
காத்தருபூகப்பாளைகதுமெனவுதிருங்கங்கை
ஆர்த்தனரேறியாங்கணருமறைமுனிவர்சூழ
வேத்தவையிருந்தகோலவியலெரிவேள்விசென்றூர்.

வித்தகமுனிவன்பின்போமைந்தர்கள்முனிவேடத்துக்
கத்தகரிவர்களென்பார்காணுதுங்கடைக்காலென்பார்
கைத்தலந்தூயபாதங்கண்ணிணைக்கமலமென்பார்
இத்தலத்திவரைப்போலவெழிலுள்ளோரில்லையென்பார்.

கோடகங்கொண்டகேள்விக்கோல்களோரேழுங்கோத்த
மாடகயாழையின்றிவரிசிலையுளதேயாயின்
பாடகமலர்த்தாளன்னைபணிமொழிமறுதுபோகிக்
காடகமகிழ்ந்துமீண்ட † கண்ணனேபோல்வரென்றூர்.

வேறு

வெம்பரிவேள்வியிலிருந்தவேந்தரும்
உம்பருமுனிவருமுளமகிழ்ந்திட
இம்பரினிராகவனிசைகொளின்னிசை
தும்புருநாரதர் ‡ தொலையப்பாடினர்.

மாடகயாழிடத்தேந்துமைந்தரால்
பாடியவின்னிசைப்பனுவறஞ்செவி
ஊடுறநிறைதலாலுருகுகின்றையோ
டேடலர்தாரினுற்கெடுத்துக்கூறினர்.

---

* கல்லதர் — மலைவழி. † கண்ணனே — இராமனே.
‡ தொலைய — தோற்க.

வேறு

ஓதநீர்வண்ணவேள்விகாணியவுவந்துவந்த
மாதவர்மன்னராதிமா § சபைமைந்தர்பாடும்
தீதறுதெய்வகானஞ்செவிமடுத்தினிதின்மாந்தி
ஈதுநாமிதற்குமுன்புகேட்டறியாததென்றார்.

வேறு

அனையவர்த்தருகெனவமலனேவலும்
புனைதுகிற்போர்வையர்புலிக்கண்பார்வையர்
இனைநரைமுடியினரிடிக்குஞ்சொல்லினர்
* துனைமலரடியினர்தொழுதுபோயினார்.

ஆயசிராகவனரு † ளிப்பாடென
வாயில்காப்பாளருமகிழ்ந்துகூறலும்
ஏயெனுமாத்திரையிளையமைந்தரும்
போயவாரரசவைபுகுந்துமேவினார்.

குரன்முதலெழுவகைநரம்புகூட்டிய
விரல்கவர்ந்தடுத்துளவேதர்சீரியாழ்
கரமிசைவாங்கினர்கவின்கொள் ‡ காப்பிய
உரைபயிலின்னிசையுரைப்பதாயினார்.

வேறு

§நகவன்மாசிறகரிந்தவனான்மறைக்கிழவன்
அகவன்மாயையென்றறநெறி Ψ நால்வருக்களித்தோன்
உகவன்மாய்த்தவருணர்வருமறையைவான்மீகி
பகவன்மாதவன்பணித்தனவண்ணமேபகர்வாம்.

---

§ சபை — சபையினர் ஆகுபெயர்.

* துனை—விரைந்து. † அருளிப்பாடு—கட்டளை. ‡ காப்பியஉரை இராமாயணவசனம். § நகவன்மாசிறகு—மலையின்பெரிய இறகு. Ψ நால்வருக்கு—நால்வராவார். ஸனகர்—ஸனாஸந்த—ஸனாதன—ஸனத்குமாரரென்பார்.

ஞானநாயகனுன்மறைநாயகனளினத்
தேனநாயகன்றிருப் ¶ பதநதிபொதிசெனியன்
ஆனநாயகனம்பிகைக்கருடிருக்கதைக்கோர்
$சேனைநாயகனடியிணைசிறந்தநற்றுணையே.

நாடுகோசலநாடுமாநதிபுனற்சரயு
ஆடுதிண்கொடியயோத்திமாநகரதற்கிறைவன்
தேடுவண்புகழ்த்தசரதன் ⁘ றேவியர்முதன்மை
சூடுகோசலைகைகேசிசுமித்திரையென்பார்.

மற்றுந்தேவியரறுபதினாயிரமடவார்
சொற்றமன்னவன்சுடர்புகழ்வேள்வியைத்தொடங்கிப்
பெற்றமைந்தர்பேர்பிறங்குவேலிராகவன்பரதன்
எற்றுநீள்புயத்திலக்குவன்சத்துருக்கினனே.

அன்னமன்னவனரியணைமீதுவீற்றிருந்தான்
இன்னமாநிலம்படைப்பெனென்றவனியல்வேள்விக்
குன்னன்மைந்தரிலிராமனைத்தருதியென்றுரைத்தான்
மன்னர்மன்னவன்மறுத்தனன்வசிட்டனீதுரைத்தான்.

மறுத்தியன்றெனவுரைத்தலுமன்னர்கோன்முனியைப்
பொறுத்தியென்றவண்பொன்னடிசென்னியிற் * புனையா
உறுத்திமைந்தரையளித்தலுமுவந்துமாமுனியும்
கறுத்தசெம்மலுந்தம்பியுங்காடுசென்றடைந்தார்.

காமன்மாறுபட்டுலந்ததோர்காடுகண்டேகித்
தாமவார்குழற்றாடகைபடச்சரந்தூண்டி
ஏமமாகியபடைக்கலம்யாவையுமெய்தி
ஓமமாவலியுறைந்ததோருறையுள்சென்றுறைந்தார்.

---

¶ பதநதி—கால்வழி கங்கை. $ சேனைநாயகன்—விடுவசேனன்.
⁘ தேவியர்—தேவியரில்.
* புனையா — செய்யாவென்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

வெவ்விவிச்சினவீரரைக்காக்கெனவிடுத்தே
அவ்விடத்துமாமுனிவனும்வேள்வியையமைக்க
எவ்விடத்தினுமரக்கர்வந்திடியெனவார்த்தார்
வவ்விடச்சரமாரியால்வானத்தைமறைத்தார்.

கண்டவீரனுமரக்கரைக்கடிந்துதாடகையாம்
சண்டவேகத்தடனையரிலொருவனைச்சரத்தால்
துண்டமாக்கிமற்றொருவனைக்கடல்புகத்துரந்தான்
மண்டுவேள்விசெய்முனிவனுமதுகண்டுமகிழ்ந்தான்.

கண்டமாமறைமுனிவனுந்தம்பியுந்தானும்
கண்டல்சூழ்கரைக்கங்கையுங்கானமுங்கடந்து
பண்டைமாநிறமகலிகைபெறப்பணித்தருளி
விண்டொடும்மதின்மிதிலைமாநகரின்மேவினரால்.

சனகர்கோனைவந்தணுகலுந்தழல்புரிவேள்வி
முனிவவிங்கிவராரெனக்கருளெனமொழிந்தான்
வினையம்வேறிலைவிறல்புனைதசரதனென்பான்
தனையர்மற்றுநின்றநுவலிகாண்குறச் † சமைந்தார்.

வேறு

இந்திரவில்லெனயாருமியம்ப
வந்தநெடுஞ்சிலைவள்ளல்வளைத்தான்
அந்தரவானிலரம்பையரார்த்தார்
தந்தையுகந்திடச்சார்ந்திடுமென்றே.

சனகனலந்திகழ்தசாதனுக்கோர்
துனியறுமோலையைத்தூதொடுமேவத்
தனையரொடுங்கிளர்தவமுனியோடும்
வினையம்வலான்மதின்மிதிலையடைந்தான்

தெள்ளமிழ்தம்புரைசீதையையன்பால்
வள்ளலிராமன்மகிழ்ந்துமணந்தான்

† சமைந்தார் — ஒருபட்டார்.

முள்ளிலவெயிறிதழ்மூவரையும்போர்
வெள்ளிலைவேலவர்மூவரும்வேட்டார்.

அந்நகர்தன்னையகன்றனரிப்பால்
மன்னுமழுப்படையான்சிலைவாங்க
*யன்னவனைத்தவமாரவிடுத்தே
பொன்னணிமாடவயோத்திபுகுந்தார்.

அரியணைமீதிலிருந்தரசாளும்
வரிகழன்மன்னன்வசிட்டனைநோக்கா
உரியதவம்புரிவேனென்மகற்கே
விரிகதிர்மோலிமிலைச்சுமினென்றான்.

அன்னதுகூனியறிந்தனள்சொல்லக்
கன்னன்மொழிக்குயில்கைகேசிகேட்டே
மன்னவநீமுனளித்தவரத்தால்
என்மகனுக்கரசீந்தருளென்றாள்.

வடிவுடைமன்னன்மயங்கினன்வீழ்ந்தும்
இடுகழல்வீரவிராகவின்றே
†நெடில்படுகானகநீபுகுகென்றே
கொடியவள்சீரைகொடுத்தனளன்றே.

மலர்க்குழலாளொடும்வார்சிலைவண்கை
இலக்குவனோடுமிராகவனன்றே
அலக்கணுறுமலயோத்திகடந்தே
நலக்குறுகங்கைநறுங்கரைநண்ணி.

அங்கணிருங்குகனம்பிவிடப்போய்க்
கங்கைகடந்துறுகங்குலினங்கோர்
சங்கையின்மாமுனிசாலையினண்ணிக்
‡கொங்கலர்சித்திரகூடமடைந்தான்.

---

*மின்னிடைக் கைகேசி வீரனைவிட்டே என்றும் பாடம்.
† நெடில் — மூங்கில்.
‡ கொங்கலர் — கோங்கலர்களையுடைய.

சித்திரகூடமடைந்திடுசெய்தி
அத்தனறிந்திவணுருயிர்விட்டான்
வித்தகமாமுனிமெய்ப்பரதற்கே
உய்த்தனனேலயுணர்ந்தனன்வந்தான்.

வேறு

மன்னனுக்குமகனுக்குமுற்றவா
றன்னைகூறவறிந்துமனந்தளர்ந்
தென்னபாவிசெய்தாயென்றிரங்கினன்
தன்னைமாமுனிதான்வந்துதேற்றினன்.

இன்னதந்தைக்கிங் * கீமக்கடன்செய்த
பின்னைமாமுடிசூடெனப்பேசிடப
பன்னுமாலைப்பரதனிராகவன்
தன்னைநாளைத்தருவெனென்றோதியே.

சடையும் † வற்கலையுந்தரித்தாங்கிரு
புடையுந்தாயருமன்னரும்போதர
இடையகங்கைக்குகனொடுமேறிப்போய்க்
கொடிகொள்சித்திரகூடஞ்சென்றெய்தினன்.

வையமாளுடையானைவணங்கிப்பின்
ஐயன்வானமடைந்ததுகூறிட
ஐயகோவென்றரற்றியிராகவன்
கையினலக்கடன்கழித்தானரோ.

ஆதிமாமுடிசூடென்றடிதொழப்
போதியேழிரண்டாண்டுபொறுத்தியென்
றேதமின்றியிராகவன்கூறலும்
பாதுகங்கொடவனும்படர்ந்தனன்.

---

* ஈமக்கடன் — அந்தியேட்டி.
† வற்கலை — மரவுரி.

விடங்கொள்வேற்கைவிராதனைவீட்டிப்போய்த்
தடங்கொள்வீடுசரபங்கனுக்களித்
தடங்கவா ‡ வமகத்தியன்றந்தபின்
இடங்கொள்பஞ்சவடியிற்சென்றெய்தினன்.

மங்கைசூர்ப்பநகைபெயர்மாதராள்
கொங்கைநாசிகுழையொடரிந்தபின்
அங்கையாற்றன்வயிறலைத்தாவெனக்
கங்குல்வாழ்க்கைக்கரனுக்குரைசெய்தாள்.

கரனுந்தூடணனுங்கலினப்பரித்
திரிசிராவுஞ்சினப்படையீட்டமும்
வரனிராமன்கைமாண்டதெல்லாங்கடி
துரைசெய்தாள்சென்றிராவணற்கோடியே.

சீதைமற்றவன்றேவியைக்கொண்டியான்
போதலுற்றுழிப்புக்கதிதென்றலும்
காதலுற்றவட்காண்குறுவாசையான்
*மாதுலற்கொருமாற்றஞ்சென்றோதினன்.

மறுத்துணர்த்திடமாமன்மாரீசனும்
வெறுத்துரைத்தனன்வெஞ்சொலிராவணன்
பொறுத்திநீயெனப்பொன்னிளநவ்வியாய்
நிறுத்தசீதைநிலையிற்சென்றெய்தினன்,

கண்டுசீதைகவர்ந்ததுதாவென
†அண்டர்கோனுமதன்பின்னரேகியே
கொண்டமாயையறிந்துகொலைசெய்தான்
ஒண்டொடீஇயிளையோனென்றுலைந்ததே.

அன்னமன்னவளவ்வுரைகேட்டலும்
தன்னநாயகன்றம்பியையேவினள்

‡ ஆவம் – அம்புகூடு. * மாதுலன் – மாமன்
† அண்டர்கோனும் – தேவர் தலைவனாகிய இராமனும்.

பன்னசாலையிற்பார்ப்பனவேடமாய்
‡இன்னல்செய்யவிராவணனெய்தினன்.

§மானமீதுமடந்தையைக்கொண்டனன்
போனபோதுபுகுந்தசடாயுவை
ஈனமாக்கித்தானேறியதேர்விடா
மீனவேலையிலங்கையைமேவினன்.

மன்னிராகவன்றம்பியைவந்தவா
றென்னையென்னவியன்றதுரைசெய்தான்
பன்னசாலையிற்பாவையைநாடிப்போய்
முன்னர்வீழ்ந்தசடாயுவைமுன்னினர்.

வேறு

இறந்தவெருவைக்கரசையீமவெரியேற்றி
முறஞ்செவியயோமுகியைமூக்கினையரிந்து
மறந்தருகவந்தனையும்வானினிடைவைத்திட்
டறந்திகழ்தருஞ்சவரியாச்சிரமமுற்றார்.

மிக்கசவரிக்கினியவீடருளிவிட்டுப்
பக்கமதுமிக்கமலர்ப்பம்பையதுகண்ணுற்
றக்கணமகன்றநுமனுமெனவுரைப்பச்
சுக்கிரிபனைத்துணையெனத்தொடர்வுகொண்டான்.

மந்தரமெனத்திகழ்மராமரமதெய்தே
துந்துபிகளேபரமதைச்சுவடுறுத்தி
இந்திரன்மகற்கியமலோகமருளித்தன்
அந்தமுடைவாளவன்மகன்பெறவளித்தான்.

சுக்கிரிபனுக்குரியதொன்முடிகவித்தே
மிக்கதிறல்வானரர்கண்மேவவருவித்தே
க்குமுகின்மிக்கமழைக்காலமதகன்றால்
இக்கண்வருவாயெனவிராகவன்விடுத்தான்.

---

‡ இன்னல்செய்ய – துன்புறுத்த. § மானம் – விமானம்.

சுந்தரனுமத்துணை துயர்க்கடலுளாழ்ந்தான்
இந்திரன்மகற்குரியதெய்தினனிருந்தான்
வந்திலனருக்கன்மகன்மாரிகழிவுற்றும்
தந்தனையெனக்கடிதுதம்பியைவிடுத்தான்

மற்றவனழைத்தருளமாருதியுமேனைக்
கொற்றவனும்வந்தனரிராபனடிகூடி
*எற்றதுசெயக்கடவதென்றனரிருந்தார்
முற்றிழையைநாடவிடுமென்றிறைமொழிந்தான்.

அன்றநுமனங்கதனறிந்தருள்செய்சாம்பன்
என்றவர்கடம்முடனிரண்டுகவிவெள்ளம்
சென்றனர்கடென்றிசையினிற்கடிதுசில்லோர்
†பொன்றலில்பிலத்திடைபுகுந்தனர்பெயர்ந்தார்.

வேறு

குன்றமுநதிகளுங்குழைந்தகானமும்
தென்றிசையெங்கணுந்தேடிக்காண்கிலர்
இன்றுயிர்விடுவதேநன்றென்றியாவரும்
மன்றல்சேர்மகேந்திரவரையைமேவினர்.

இறைவியாண்டிருந்தவாறெருவைவேந்தனும்
முறைமையால்வந்தவாமொழியக்கேட்டபின்
அறைகழலநுமனுமரக்கிவாய்பிளந்
தெறிகடல்கடந்துபோயிலங்கையெய்தினன்.

எரிவிழி ‡யிலங்கைமாதேவிதான்கெடக்
கருநிறவரக்கர்தங்கனகமாளிகைத்
தெரிவையையெங்கணுந்தேடிக்காண்கிலான்
அரிமலர்ச்சோலைகண்டாழிகாட்டினன்.

---

* எற்றது — என்னையது. † பொன்றலில் — கெடாத.
‡ இலங்கைமாதேவி — இலங்கணி.

மானவனறிந்தருண்மதுரமாமணி
சானகியளித்தனள்விடையுந்தபின்
யானிவண்வந்துவீணேகறீதெனுப்
போனமாமாருதிபொழிலேவாட்டினுன்.

காட்டொருவானரம் * கடிகொள்சேனையை
வாட்டினதென்றுகாவலர்சென்றேதலும்
கேட்டனன்றசமுகன்கிளர்ந்தசேனையை
மூட்டினனதனெதிரநுமன்முன்னினுன்.

வேறு

தொக்கரக்கரைத்துரந்துதோரணத்திருந்துபோய்
அக்கனைத்தரைப்படுத்தரைத்திரத்தமிக்கெழத்
தக்கசம்புமாலியைத்தரைப்படுத்திவெற்றிசேர்
பக்கநின்றபஞ்சசேனைமன்னரைப்படுத்தினுன்.

மேகநாதன்வந்தெதிர்த்துவேதநான்முகன்றரும்
நாகபாசம்வீசினுனநாதனைக்கொணர்ந்துதம்
ஓகைவாளிராவணற்குரைத்தலும்முருத்தெழா
ஏகவாலினங்கியிட்டெரித்தியென்றியம்பினுன்.

வாலின்வைத்ததீயைமாடமாளிகைக்கண்வைத்தபின்
சாலவந்துசீதையைப்பணிந்துசாகரந்தனைக்
காலினேகிவந்துதங்கவிக்குலத்துவீரராம்
வேலேசூழவேலிராமன்விட்டசோலேகிட்டினுன்.

†மன்றலோதிதந்தகோலமணியைநல்கிமாருதி
நின்றுவாசகங்கள்கூறநீடுவேலிராமனும்
‡என்றின்மைந்தவிப்பதாதியெழுகவென்றெழுந்தபின்
தென்றிசைக்கருங்கடற்றிரைப்புறத்துமேவினுர்.

---

* கடிகொள் — காவல்காக்கின்ற.
† மன்றலோதி — மணம்பொருந்திய கூந்தலினையுடையாள்.
‡ என்றின்மைந்த — சூரியகுமாரனுன சுக்கிரீவ.

வேறு

கடற்கரையிறுத்தனன்கவியின்சேனையோ
டடற்படையிராகவனரக்கனேவலால்
மடற்கமலத்தயன்மயனுந்தானுமாய்ப்
படைத்தனனிலங்கையைப்பண்டுபோலவே.

மேலுயர்மண்டபத்திருந்துவெய்யவன்
தோலியல்குரங்கிவ்வூர்ச்சுட்டதாவென
மாலியவான்முதலரக்கர்வல்லென
ஓலுயர்கடலெனவுளையக்கூவினார்.

வேறு

மைந்தனிந்திரசித்துமவுலியான்
தந்தைதன்னொடுகூறத்தடுத்தெதிர்
தந்தபோதவர்தங்கட் * கயில்படு
வெந்தபுண்ணெனவீடணன்கூறுவான்.

வேறு

இரணியனென்பவன்யாவர்தம்மினும்
முரணியனவ † னிவன்முனியமாய்ந்தனன்
அரணியனெஞ்சினானவன்றன்றேவியாம்
தரணியின்றாயைவிட்டருளறக்கதால்.

என்றலுமிராவணனெரியுஞ்சிந்தையான்
நின்றனையேனினை ‡ யடுவலீங்கெனத்
தன்றுணைநால்வருந்தானும்வீடணன்
வென்றிகொளிராகவன்சரணமேவினான்.

கடலுடையிலங்கையி § னரணுங்காவலன்
உடையநீள்வரங்களுமைந்த ¶ ரூற்றமும்

---

* அயில்படு—வேல்பட்ட. † இவன்—இவ்விராமனாகிய நரசிங்கன்
‡ அடுவல் – கொல்வேன். § அரணும் – மதிலும்.
¶ ஊற்றமும் – வன்மையுப்.

படையினதீட்டமும்பகர்திநீயென
அடையவாளிராமனுக்கரக்கன்கூறினன்.

வேண்டினனொருவழிவேலைவேந்தனை
ஈண்டியவிலங்கைக்கன்றெய்தவின்மையால்
தூண்டினன்சுடுசரம்வருணன்றேன்றிவந்
தாண்டகையிராகவனடியின்வீழ்ந்தனன்.

ஆனபேர்வேலையையடைத்தபின்புயர்
¶மானவர்தலைவனும்வானரேசனும்
கோனகரின்புறக்குன்றிறுத்தபின்
ஊனமிலிராவணனொற்றர்மேவினர்.

பற்றினர்சாரணசுகரைப்பன்முறை
சொற்றனர்கண்டவத்தூயமானவன்
விற்றொழில்வீடணற்கரசுவிட்டதும்
கொற்றவற்குரைக்கெனக்கூறிப்போக்கினன்.

வேறு

சேதுபந்தமும்வீடணன்செய்தியும்
தூதுசென்றவர்சொல்லத்தசமுகன்
ஓதும்வெவ்வுரையோதினனப்பொழு
தேதமின்றியெழுந்த * திரவியே.

வேறு

இலங்கைவேந்தனுமிராமனுமெறிபடைகாண்பான்
†இலங்கைமாளிகைத்தலையினுமலையினுமேற
இலங்கையான்மணிமுடிபறித்திரவிசேயகன்றான்
இலங்கைவேந்தனுமிராமனுமிருக்கைசென்றடைந்தார்.

---

¶ மானவர்தலைவன் — இராமன்.
* இரவி — சூரியன்.
† இலங்கை — விளங்குகின்ற அழகிய.

நாலுவாயிலுநரரும்வானரருமேநண்ணி
‡ஓலவேலையினுருத்தனரெனச்சிலருரைத்தார்
ஆலகாலவேலரக்கனும்படைவகுத்தமைந்தான்
வேலிராகவனங்கதற்றாதெனவிட்டான்.

சீதையென்னுமத்திருவைவிட்டுன்சிரம்பெறுகென்
றோதிவிட்டனனிராமனென்றங்கதனுரைத்தான்
போதிபோதியென்றிராவணன்புகறலுமிராமன்
பாதபங்கயம்பணிந்தனனெழுந்ததுபதாதி.

அரக்கரைம்பதுவெள்ளமுமனிகமுமுடையக்
குரக்குவேந்தனுமநுமனுநீலனும் $ குரைத்தார்
அரக்கனவ்வுரைகேட்டுவந்தடர்த்தலுமனுமன்
குரக்குவேந்தர்மற்றவரவன்சரம்படக்குலைந்தார்.

இளையவீரனுமிராவணனிரைந்துசிலையும்
உளையவெய்தன ✤ னுடம்பிடியவனுரத்துய்த்தே
வளையும்வாளெயிற்றிராவணன்வவ்வுவான்செல்ல
இளையவீரனைமாருதியெடுத்துக்கொண்டகன்றான்.

ஆளியாயிரம்பூண்டதேரரக்கன்வந்தடர்த்தான்
காளைமாருதிதோளின்மேலிராமனுங்கடந்தான்
மூளும்வார்சிலைபத்துடன்முடிபத்துமொழித்து
நாளைவாபொரவென்றனனகர்சென்றுபுக்கான்.

மூலத்தானையைத்தருகெனத்தூதரைமுடுக்கிக்
கோலப் [1] பள்ளியிற்குறுகலுங் [2] குரவன்வந்தணுகிச்
சாலச்சாம்பினைமுன்னமேசாற்றினெனென்றான்
மாலைத்திண்புயமகோதரன்மறுத்திதுசொன்னான்.

கும்பகன்னனையழைக்கெனத்தூதருங்கொணர்ந்தார்
எம்பிபோரினையியற்றுதிமனிசரோடென்றான்

---

‡ ஓலவேலை—ஆரவாரமுள்ளகடல். $ குரைத்தார்—ஆரவாரித்தனர்.
✤ உடம்பிடி – வேல். ✤ முடுக்கி – விரைந்தோட்டி. 1 பள்ளியில் – படுக்கையில். 2 குரவன் – பாட்டனை மாலியவான்.

*வெம்புபோர்க்களம்புகுந்தனன்வினவினனிராமன்
தம்பிநானிவற்றருகென்ருன்றசமுகற்கிளையான்.

வியந்துவீடணனழைத்தலும்வெய்யவன்மறுத்து
†வயந்தனைப்பிசைந்தருக்கன்மாமகனைக்கொண்டகன்ருன்
இயைந்தநாசிகொண்டிரவிசேயகன்றனனிராமன்
உயர்ந்தொரம்பினலவன்றலையுவரியிலிட்டான்.

அப்புறத்தினன் ‡ மருத்தனைச்சனகர்கோனுக்கிக்
குப்புறத்தினன்மகோதரன்சிதையுங்குலைந்தாள்
எப்புறத்தினுமிராவணன்செவியெலாங்கேட்க
இப்புறத்தினின்ருர்த்ததங்கிராவணன்சேனை.

வேறு

கும்பகன்னன் $ குறைந்தலைகூறிடத்
தம்பியோவென்றரற்றித்தசமுகன்
அம்பொற்றேரதிகாயனையேவினுன்
எம்பிராற்கிளையோனெதிர்தாக்கினுன்.

வேறு

எதிரெதிர்தாக்கினவிரண்டுசேனையும்
கதுமெனவிராகவற்கிளையகாவலன்
✤அதிர்கழல்புனையதிகாயன்றன்னையோர்
சதுமுகன்சரத்தினுற்றலையைத்தள்ளினுன்.

வேறு

குரக்குவேந்தர்கள்குன்றுகொண்டேவலும்
அரக்கன்மைந்தரனைவருமாண்டனர்

---

* வெம்புபோர்க்களம் — கோபந்ததும்புகின்ற சமர்க்களம்.
† வயந்தன் — வசந்தனென்னு மொருவானரவீரன்.
‡ மருத்தன் — ஒரு அரக்கன். $ குறைந்தலை — இறைந்தலை.
✤ அதிர் — முழங்குகின்ற.

பரக்கவன்கொலைப்பாடுகண்டார்சிலர்
இரக்கமெய்தியிராவணற்கோதினர்.

அரக்கனவ்வுரைகேட்டலுமங்ஙனே
இரக்கமுற்றிந்திரசித்தையேவினன்
குரக்குவேலையைக்கொன்றனன்கொன்றபின்
தரைக்குநாயகன்றம்பியையெய்தினன்.

வேறு

ஏழுங்கவிலக்குவன்மேனிமேல்
கூரழுங்கநெடுஞ்சரங்கூட்டினன்
தோழிந்துதசமுகன்றின்மகன்
போரழிந்துவிசும்பிடைப்போயினன்.

வேறு

இடந்தருமிராகவற்கிளவலைக்கவித்
தடம்புனையெழுபதுவெள்ளத்தானையை
அடங்கலுமரக்கன்மாமதலையல்லிடை
விடந்தருநாகபாசத்தின்வீக்கினன்.

போயினனரக்கனும்புரண்டுவானரர்
கூயினரிராகவற்கனலன்கூறிட
மேயினன்வருந்தினன்விகங்கராசனும்
பாயினனுரகனைப்படுத்திப்போயினன்.

சென்றதூதுவர்சொலத்தெசமுகத்தவன்
தன்றகுபெரும்படைத்தலைவற்கூயினன்
நின்றிலர்கொன்றனர்நிசிதர்தங்களைக்
கொன்றனர்வானரத்தலைவர்குன்றினல்.

வேறு

உரையதுகேட்டுமைந்தர்க்குரைத்தலுமரக்கர்கோமான்
கரன்மகன்மகரக்கண்ணன்செல்கெனக்காற்றினம்பும்
வருணன்றனம்புங்கூட்டிமாயையாவிட்டான்மாயன்
பொருசரமொன்ருற்சென்னிபோக்கினன்மாயையோடும்.

இற்றனரரக்கர்தானையிருபதுவெள்ளத்தோடும்
*செற்றவாளரக்கன்கேட்டான்மைந்தனைச்சேறியென்றான்
மற்றவன்றேரிலேறிவானரப்படையைச்சீறி
எற்றுவனினியென்றெண்ணியிலக்குவன்றன்னோடேற்றான்.

அறுபதுவெள்ளத்தானையாயிரந்தேரினோடும்
வெறுவதுசெய்யக்கண்டுமயன்படைவிடுவேனென்றும்
உறுவலியரக்கன்வானத்தொளிந்ததையோரான்றம்பி
எறிபடைபூசைசெய்வானெழுந்தனனிராமனிப்பால்.

வேறு

உரைத்தனனிராவணியிராவணற்குற்றவாறெல்லாம்
வரைப்புயமகோதரன்வருகவென்றேவினன்வலத்தால்
குரைத்தெழும்வானரக்குழுவைவென்றிலக்குவன்சரத்தால்
†பொருக்கெனவெழுந்தனனந்தரவிசும்பிடைப்போனான்.

மூட்டினமகோதரன்முனிவருமமரர்களாகச்
சிட்டனீதென்னைகொலென்றுளந்திகைத்தனனின்றான்
விட்டனனயன்படையிராவணியிலக்குவன்மீதே
பட்டனன்பட்டவாறிராவணற்குவகையிற்பகர்ந்தான்.

ஏய்ந்தெழிலிராகவனிலக்குவன் [1] பாடுகண்டேங்கிச்
சாய்ந்தனன்சாம்புவன்மாருதிதருதியாலென்னப்
பாய்ந்தனன்மருந்துகொண்டமரிடையயனதுபடையால்
ஓய்ந்தவர்யாவருமுயிர்த்தனர்தூதர்போயுரைத்தார்.

வேறு

யாவதிங்குநாஞ்செய்வதென்றியம்பலுமைந்தன்
ஆவதுண்டெனவரக்கனுமதுசெயென்றடைந்தான்
தேவிசீதையாச்சமைத்தபின்னநுமன்முன்சிதைத்துப்
போவனானயோத்தியிலெனநிகும்பலைபுக்கான்.

---

* செற்றவாளரக்கன் — சீற்றத்தினையுடைய.
† பொருக்கென—விரைவாக. [1] பாடுகண்டு—மரணத்தினைப் பார்த்து

ஆயவாறெலாமநுமன்வந்திராகவற்கறைய
மாயையேயெனவீடணன்வலிக்கின்றதென்றான்
ஏயகாரியஞ்செய்திரென்றெழுந்தனனெம்மான்
போயொர்மாயையால்வீடணனிலங்கையிற்புக்கான்.

ஆனமாயைகண்டறிந்துவந்தரக்கர்கோனுரைப்ப
வானரேசனுமிளவலும்வடதருநீழல்
சேனைசூழ்தரநிகும்பலைவேள்வியைச்சிதைத்தே
போனபோதெதிரிந்திரசித்தமர்புரிந்தான்.

†கறுத்திராவணிவிடுங்கணையெலாம்விடுகணையால்
இறுத்தொரம்பினாற்கையுடன்வில்விழவெய்தான்
குறித்தொர்சூலத்தாலிலக்குவனுயிர்கொள்க்கொதித்தான்
அறுத்தொரம்பினாலவன்றலைகொண்டனனகன்றான்.

அடுத்துரைத்தனர்தூதுவரரக்கர்கோன்களம்புக்
கெடுத்திரங்கினன்மதலைதன்றலையிலாயாக்கை
படுத்தனன்றயிலத்திடைமூலமாப்படையும்
விடுத்துவந்தடிபணிந்தனராயிரவெள்ளம்.

மூலத்தானையையிராமன்மேன்முடுக்கித்தான்குரக்குக்
கூலத்தானைமேற்சென்றனனிராவணக்கொடியோன்
மூலத்தானைசென்றிராமனைமுடுக்கலுங்குரக்குக்
கூலத்தானைபோயிரிந்தனகுரைகடற்கப்பால்.

வேர்த்திருந்தவக்கவியெலாமங்கதன்மீட்பக்
காத்திநீயெனத்தம்பியைக்காவலாவிடுத்தே
ஆர்த்தவெம்படையாயிரவெள்ளமுமடியக்
கோத்தவம்பினாலேழரைநாழிகைகுறைத்தான்.

அத்தனச்சிலையிளவலோடரக்கர்கோனடர
*வித்தினன்சரம்பலப்பலவிளவலும்விட்டான்
எத்தினன்னெடுமோகமாப்படைதொடுத்தெய்தான்
அத்தனச்சரமாழியான்சரத்தினாலட்டான்.

---

† கறுத்து — கோபித்து. * வித்தினன் — இறைத்தான்.

அறிந்துகூறினன்வீடணனுமெனவயில்வேல்
எறிந்தனன்னவன்மேனியிலிலக்குவனேற்றான்
பிறிந்துபோயினனிராவணன்மாருதிபெயர்த்தும்
செறிந்தமாமருந்தழைத்தலினுயிர்பெற்றான்சேயோன்.

சென்றுகூடினனிராமனைத்தெசமுகத்தயனும்
வென்றிமூலமாத்தானைக்குவிருந்திடவமைந்தான்
பொன்றினாரவரென்பதுதூதுவர்புகலக்
கன்றினான்களம்புக்கனன்கவியெலாமவிய.

வேறு

†பூதலமளித்தோன்கூறப்புரந்தரன்கொடுத்ததிண்டேர்
மாதலிகொணரவேறிமகிழ்ந்தனனிராமனென்று
காதினவரக்கர்சேனைகவிப்பெருஞ்சேனையான்ம
கோதரன்றன்னையாவிகுறைத்தனன்பகழியொன்றால்.

அந்தரத்தரக்கன்போகவமலன்றேரணுகவிட்டான்
மந்திரமாயையெய்யஞானத்தால்வள்ளன்மாய்த்தான்
உந்தினசூலமொன்றையுகுத்தனனுங்காரத்தால்
கந்தரத்தலைகள்பத்துங்கரங்களுங்கணையாற்கொய்தான்.

கிளைத்தனசிரமுந்தோளுங்கேடிலானெய்யவெய்ய
விளைத்ததோர்வரமுண்டென்ன‡விரிஞ்சன்மாப்படையைவிட்டான்
உளைத்தவன்றலத்துவீழ்ந்தானுடன்பிறப்பென்னுமன்பால்
இளைத்துவந்தடியில்வீழ்ந்தானிராவணற்கிளையகாளை.

$மயன்மகள்வந்துமாய்ந்தாள்வருகெனநிருதர்க்கூவிப்
புயவலியிராமவேந்தைப்போற்றுதிரெனவிராமன்
இயமலியீமஞ்சேர்த்தியென்றனுமரக்கன்சேர்ந்தான்
செயமலியநுமன்றன்னைச்சீதைபாற்சேறியென்றான்.

---

† பூதலமளித்தோன் — பிரமதேவன்.
‡ விரிஞ்சன் — பிரமதேவன்.
$ மயன்மகள் — மண்டோதரி.

சென்றனனநுமனோடுவீடணன்சீதைதன்பால்
நின்றவணிகழ்ந்தவாறுநிரப்பிமஞ்செனநீராட்டி
ஒன்றியகலன்கள்பூட்டியுய்த்தனனிராமனோக்கி
நன்றுநீசெய்தியென்னநடுங்கினளெரிபுக்குய்ந்தாள்.

ஏறிடவிமானந்தன்னில்யாவருமிறைவிதானும்
மாறின்வசந்தன்சேனைநின்றதுமலரவன்பால்
கூறினனநுமன்வாங்கிக்கொண்டபின்குரிசிறானும்
ஆறியபரத்துவாசனணிமலர்ச்சோலைபுக்கான்.

வரதனுமநுமன்றன்னைவரன்முறையேவலோடும்
பரதனையெரிபுகாமற்பண்ணினான்மீண்டபின்னர்
எரிமணிவிமானத்தேறியாவருமிளையகோவும்
அரிமலர்க்குழலினாளுமிராமனுமயோத்திசேர்ந்தார்.

வேறு

பொன்னியல்சீதைதன்புதல்வர்பாடிய
இன்னிசைமருவியவியல்கொள்காப்பியம்
தன்னிசையாதலாற்றரளவெண்குடை
மன்னவன்மைந்தரைமகிழ்ந்துகூறுவான்.

வயம்புனையிராகவன்மைந்தர்தம்மையம்
புயந்திகழ்விழிமலர்புனைந்துநோக்கியிப்
பயன்கெழுகாப்பியப்பனுவலின்னிசை
இயம்பினரியாவர்நீர்யாவரென்றனன்.

நும்பெரும்புகழினை * நுனித்துக்கூறினான்
வம்புயர்கங்கைவான்மீகியம்முனி
தம்பமென்றவனுரைதலையிற்கொண்டுளோம்
எம்பெயர்குசலவரென்றுகூறினார்.

நீடியதன்னுருநிகர்க்குமோரிரண்
டாடியபாவையனாருக்கங்ஙனே

---

* நுனித்து — சிறப்புற எடுத்து.

பாடியபனுபலாற்பத்தின்மேலுமென்
கோடிசெம்பசும்பொனேகொடுமினென்றனன்.

வேறு

மன்னவர்வலிதின்வௌவாவளமனைக்கள்ளர்கொள்ளா
இன்னுயிர்க்கிறுதிசெய்யாவிழந்தபினிரங்கல்வேண்டா
துன்னியதுயிலையொட்டாதோகையர்காதல்கூட்டா
உன்னியபொருளதீட்டாமுடைமையினின்மைநன்றால்.

பூரியர்தமைவேந்தர்க்கும்புவிபுரப்பிக்குந்துய்க்கும்
சீரியவுண்டிசேர்க்குந்தேவர்தம்முலகம்போக்கும்
காரியமனைத்துங்கூட்டுங்கருதலர்தம்மைவாட்டும்
கூரியதிதன்மேலில்லைகொழும்பொனீர்கொண்மினென்றார்.

*மூலமுஞ் † சாகந்தானும்பலங்களுமுவந்துகொள்ளும்
மாலையமுனிவரோடவ்வனத்துறைவோமதானல்
காலைநீராருளுகின்றகாஞ்சனங்காஞ்சிரங்காய்
போலுமதெங்கட்கென்றுபுகன்றனர்புதல்வர்தாமே.

குருதிவேற்றானைவேந்தன்குசலவர்தம்மைநோக்கி
வருதிரோவெம்பாலின்னுமைந்தர்நீரென்றுகூறப்
பருதிவேற்றடக்கைவேந்தேபாடுதுநாளும்வந்தென்
றறிமலர்த்தாரினனையகன்றுமாமைந்தர்போனார்.

பன்னியபனுவலின்சொற்குசலவர்பாடுகின்ற
இன்னுசைகேட்டுநாளுமியல்புளியொருநாளந்தப்
பொன்னியற்சனகிபெற்றபுதல்வரென்றறிந்துவாங்கித்
தன்னிகர்புதல்வர்தம்மைத்தழுவினனெழுவுத்தோளான்.

மருந்தெனத்திகழுமின்சொன்மைதிலிகற்புக்கந்த
அருந்தநிகற்புநாணுமறந்தலையறிவனேனும்
இருந்தழலதனின்மூழ்கியிலங்கையிலமரர்காணப்
புரிந்ததுபுரியுங்காணப்புரிவிப்பெனின்னுமென்று.

---

* மூலமும் – கிழங்கும். † சாகந்தானும் – கீரையும்.

வேறு

குசலவர்களை வான்மீகியிட மனுப்புதல்.

அன்னதன்மைக்குசலவரையருளினேக்கியருமறைகள்
பன்னுதவத்தின்வான்மீகிதன்பாற்போமினெனப்பகர்ந்து
மன்னர்முதலமாசனத்தைவிடுத்துப்போக்கிவளரொளியால்
பின்னுமுகில்போற்றிருமேனிவீரன்பின்னுமிவைசெய்தான்.

வேறு

வேதியர்வேந்தர்க்கெல்லாம்விடைகொடுத்தருளிநின்ற
காதலர்தம்மைப்புல்லிக்கதுமெனவெழுந்துகாதல்
மாது ‡ மைதிலிதனேடுவரமுனிவருகவென்று
தூதரையேவிப்பைம்பொற்சுடர்மணிக்கோயில்புக்கான்

இருநிலமுழுதுங்காணவெரியிடைமூழ்கியின்னும்
வருகெனமடந்தைதன்னைமன்னவனருளிவிட்டான்
வெருவுறுதழலினுன்கண்வீழ்குறும்வண்ணங்காணு
தருளுடையாரினேடியருக்கனுமத்தஞ்சார்ந்தான்.

வகைமிகுமன்னனெண்ணமறிந்தபின்வல்லியெல்லாம்
முகைமுகமவிழ்ந்துகண்ணீர்சொரிந்தனமுளரியோடும்
தொகைமிகுமரமும்புள்ளுமொடுங்கினதொல்லைவேலைச்
செகதலமென்னுமங்கைதிகழ்முகஞ்சிவந்ததன்றே.

வேறு

துண்ணெனும்படிதுன்னிமுன்றேன்றிடு
கண்ணிகந்தவர்கண்டனகாரிருள்
எண்ணிகந்ததிகாந்தமுமெங்கணும்
விண்ணுமண்ணும்விழுங்கினபோன்றதே.

‡ மைதிலி — மிதிலையிற் பிறந்தவள்.

தூபமென்குழற்றோகையர் தம்முடன்
தாபமேலிடத்தாமவர்மேற்செல்வான்
கோபமென்பதென்முன்னர்க்கொளுத்திய
தீபமென்னவெழுந்தது திங்களே.

வேறு

கொங்கவிழ்குமுதமுங்கூடிவாடிய
மங்கையர்நயனமுங்குவிந்தவாரணம்
சங்கொடுவலம்புரிதமரவண்டுசூழ்
பங்கயம்பலவும்வாய்ப்படலமர்ந்ததே.

தகைமிகுமுலகினிற்சார்ந்துளோர்வயின்
மிகுகொடையவர்புகழ்விளங்குமாறுபோல்
வகைமிகுபெரும்புகழ்வானமீமிசை
அகன்மதியொளிகெடவருக்கன்றோன்றினன்.

காலையகடன்பலகழித்துக்காவலன்
*மாலைவந்தடியிணைவணங்கிமாதவர்
சாலமாநிதிபெறவளித்ததண்புனல்
வேலைவாயெதிர்வுறவிரைந்தமீன்களே.

நலந்திகழுலகொருநான்குமேவிய
வலந்திகழ் † மன்பதைமருங்குசூழ்தரத்
துலங்கியநவமணிச்சுடர் ‡ கொளாடகம்
இலங்குசிங்காதனத்திராமனேறினன்.

வேறு

இராமன் கொலுவிருத்தல்.

அறைவேதங்கட்கறிவரியோனற்றைவைகல்கழிந்ததற்பின்
மறையோர்மன்னர்வைசியர்சூத்திரர்களாதிமண்ணுலகின்
உறைமாசனத்தையொளியாமலெலாக்கக்கூடக்கொண்டிருப்ப
நிறைஞானத்தவான்மீகினீளநோக்கியிதுசெய்தான்.

---

* மாலை — திருமாலின். † மன்மதை — மக்கட்பரப்பு.
‡ ஆடகம் — ஒருவிதப்பொன்.

## சீதையுடன் வான்மீகிவருதல்.

ஈனப்பழிக்குத்தானிறைஞ்சியிளையோன் றன்னைப்பிரிந்ததற்பின்
*மானக்கூர்வேனிறத்தூன் றவைகரேறுந்தளர்வாளை
கானிற்றெய்வங்கண்டிரங்கக்கண்களாறுய்ச்சொரிவாளை
ஞானத்தவத்தோன்பின்கொண்டுநாதன்சவையினுட்புகுந்தான்.

எண்ணுதிவளைத்துறந்தனனிவ்விறைவனென்பாரிறைவியைத்தம்
கண்ணுற்கண்டாரெல்லாருங்கண்கள்புதைப்பார்கையாரப்
பெண்ணுரிற்றுயருற்றுரில்லையென்றுபெரியோராம்
மண்ணேரிவ்வாறுரைசெய்யவந்துசீதையிதுசெய்தாள்.

### வேறு

வடித்தபைங்குழலடிமறைப்பமாசுற
உடுத்தவெண்டுகிலினளொசிந்துபின்வரத்
†தொடுத்தவெம்புற்றிடைத்தோன் றுமாமுனி
அடுத்தபேருலகுறையறையின்மேவினன்.

விரிகதிரவனெளிவிளங்கவீசிய
எரிமணிப்பூணினனிராகவன்னெதிர்
மருவுவன்மீகத்தின்வந்துதோன்றிய
அருமறைமுனிவனையடிவணங்கினன்.

வணங்கியமுனியைமுன்வைத்துத்தானுமோர்
இணங்கியவாசனத்தினிதிருந்தபின்
உணங்கியமுகத்தினளொன்றுநோக்கிலள்
நுணங்கியபூமியைநோக்கினின்றனள்.

காதலிகற்புகாசினியின்மீதலால்
மீதலமிசையருந்ததியுமேத்துவ
தாதலையாநாயகனேயறிவல்யானெனக்
கோதிலாவருமறைமுனிவன்கூறினன்.

---

* மானம் – அபிமானம்.

† தொடுத்தவெம்புற்றிடைத்தோன் றுமுனி – ஒன்றன்பின்னென்று நெருங்கிய புற்றினிடத்துத் தோன்றிய சிறந்தவான்மீகி முனிவன்.

அன்னதுவாய்மையொன்றுதிக்கங்கைபோல்
மன்னியகுலத்தொருமாசுகூறுவோர்
துன்னியநரகிடைத்துய்ப்பராலென
இன்னதுமீளவுமிசைத்திருந்தனன்.

முனிவநீயருளியமொழியைவானவர்
அனைவரும்யானுமுன்னறிவமாயினும்
கனைகடலுலகுளோர்காண்டல்வேண்டுமென்
றினையனவிராகவனெடுத்தியம்பினன்.

நாட்டியவுலகொருநான்குமோர்வயின்
ஈட்டிய * சவைநடுவிசைத்தவம்மொழி
வாட்டடங்கயல்விழிமடந்தைமைதிலி
கேட்டனளிணைதொறுங்கிளருஞ்சிந்தையாள்.

ஒன்றியகேண்மையானுவந்தபோதினும்
கன்றியபோதினுங்கலந்தபோதினும்
நன்றெனநிலைகெடாநலங்கொள்கற்பினை
இன்றொருபொருளினலியம்பற்பாற்றதோ,

பூதலமிசையருந்ததியும்போற்றிய
காதலையறிந்திருந்தவனிமீமிசைத்
தீதிலென்கட்டளைதிகழமேவிய
†காதலன்றீதெனிற்கற்புண்டாகுமோ.

மறுத்தினியுரைப்பதென்வாயின்வைத்தநஞ்
சிறக்கிடினலதுயிர்க்கிறுதிசெய்யுமோ
அறக்கொடும்பழியுரைத்தருள்வராயினர்
பிறக்கெனநெஞ்சினைப்பிளந்துகாட்டுகேன்.

தேங்கமழ்குழலியைமுனிவன்சீறலென்
றாங்கவனுரைப்படியையந்தீர்கெனத்
தாங்கியகமண்டலத்தண்ணெனீரினை
வாங்கியாசமித்திவைவழங்கினளரோ.

---

* சவை — சபை.
† காதலன் தீதெனில்—நாயகன் குற்றமான செயலென்று கூறினல்.

வேறு

தன்கணவன்செய்கொடுமையினைத்தானுட்கொள்ளாச்சானகிதான்
என்கணவன்செய்தனவெல்லாமிதமாமெனக்கென்றேநினைந்த
பின்கணவன்றனுடல்கண்டுபெரிதாற்றாதுபோய்விழுந்து - [பான்
புன்கணவன்றன்பொறைதீர்த்தான்பொற்றாள்வணங்கிப்புவிக்குரைப்

வினைப்பாசத்தையறுத்தமுனிவேள்விகாத்துமிதிலைபுகுந்
தெனக்காவீசன்வில்லிறுத்தன்றெனைக்கைப்பிடித்தவெழிலாரும்
புனைக்காயாம்பூநிறத்தானையன்றிமற்றோர்பூமனையான்
மனத்தால்வாக்கானினையேனேல்வழிதாவெனக்குமண்மகளே.

வேறு

வருந்தியேபயந்தநீமற்றென்கற்புமவ்
வருந்ததிகற்புமொன்றானதென்றிடின்
பெருந்துதிமாநிலம்பிளத்தியென்றனள்
இருந்துதியமாருமேத்துங்கற்பினாள்.

பலதலை * மாசுணபப்பள்ளிமேவிய
நிலைபெறுகற்பினாணிதிகொண்மேனியாள்
வலைமுலையாகத்தாண்மாரிக்கூந்தலாள்
அலைகடலாடையாளவனிதோன்றினாள்.

சேணுலாவிய † தலமடந்தைசீதைதன்
பூணுலாவியபுயம்பொருந்தப்புல்லுறீஇ
வாணிலாவியகதிர்வழங்கல்செல்கலாக்
கீணிலைப்படலமுங்கிழியப்போயினார்.

தீதலதென்வயிற்றிகழ்ந்ததிங்ஙனே
ஆதலிதென்கொலென்றையமெய்திடக்
காதலிபோனதோர்வழியுங்காண்கிலான்
பூதலமடந்தையைப்புலர்ந்துசீறினான்.

---

* மாசுணப்பள்ளி — அனந்தசயனம்.
† தலமடந்தை — பூமிதேவி.

முனிவனுரங்கையின் முகந்துகொண்டவக்
கனைகடல்புடைத்திடக்கிடந்தகாசினி
பனிமதிவேணியான்பாவம்போக்கிய
‡புனிதனோடிக்கிடம்போந்ததில்லையால்.

குயிற்றிடப்புனைந்தநன் மவுலிக்கோளராத்
துயிற்றிடைக்கிடந்ததுஞ் ✤ சூகரத்தினுர்
எயிற்றிடைநாகத்துமெங்கணுயகன்
வயிற்றிடைக்கிடந்ததுமறந்ததென்கொலோ.

கடறிரைத்துரப்பவுங்காண்கிலாமையன்
றடனெடுஞ்சிலைவளைத்தம்புநான்விடப்
படரெரிகொளுத்தியபௌவந்தன்னிலோர்
திடர்கொலோமறைத்ததுசீதைதன்னையே.

பூதலந்தன்னையிப்புணரிசேறெழப்
பாதலத்தழுந்திடமிதிப்பென்பாவியென்
மாதவிதனைமிகவருத்தங்காண்குறு
ஆதலினுலதற்கென்றுமாற்றலேன்.

இராமனெதிரே பிரமன் றேன்றுதல்

இன்னனவுரைத்துரைத்திகலிராகவன்
துன்னியபுவியினைத்துணிப்பெனேன்றுழிப்
பொன்னிகர்சதளப்பூந்தண்கோயிலில்
மன்னியபிதாமகன்வந்துதோன்றியே.

வானகமாருதம்வன்னிநீரெனும்
போனகம்விரும்பியோராலின்டொற்றளிர்
மேனலத்துறுதுயின்மேவிமேலைநாள்
கானிலத்துலகொருமூன்றுங்கண்டுளாய்.

---

‡ புனிதன் — மோகினியுருவங்கொண்ட திருமால்.
✤ சூகரத்தினுர் — சுவேதவாராகப்பெருமாள்.

ஒப்பருநிலைமையாயுனக்குநான்சில
செப்புவதுளததுசிறிதுகேண்மதி
எப்பொருளாய்மிகவிருண்டவானகத்
தப்புறமாயுளேயடங்குநின்னுரு.

மின்னுளேபிறந்தொளிர்மேகமாமென
நின்னுளேபிறந்தொளிர்நிலையில்யோனிகள்
உன்னுளேபிறந்திறந்தொளிப்பதல்லதிங்
கென்னிலேபிறப்பிறப்பென்னலாகுமோ.

முந்தைநாட்புலத்தியமுனிவன் * மைந்தனுர்
தந்திடுந்தசமுகன்றன்னைக்கொல்வதற்
கிந்தநாளமரர்வந்திரந்ததாலிவண்
வந்துமானுடவர்தம்வடிவிற்றேன்றினை.

ஆதிநீயுலகெலாமளித்துக்காக்குறும்
போதுநின்றுந்தியிற்பூத்ததாமரைத்
தாதியறமணியத்தனிப்பொகுட்டினின்
மீதுநின்றுலகெலாம்விரிந்ததல்லவோ.

வேறு

ஆதலாலுனக்கன்றுவந்தவிப்
பூதலத்திடைபுக்கமங்கைநின்
காதன்மங்கையாலவளைக்காண்பதுன்
† தீதிலாநிலத்தென்றுசெப்பினன்.

ஆதலாலுனக்கறிவுமன்னினல்
தீதனன்றன்னைச்செய்கொணுததற்
கேதுவாலிவையியன்றதேயெனு
வேதநான்முகன்விரித்துக்கூறினன்.

---

* மைந்தனுர் — விசிரவசு முனிவன். † தீதிலாநிலத்து — பகை பிணி மூப்பு மரண மாதிய குற்றமற்ற பரமபதமாகிய இடத்து

அங்கண்வானகத்தமலனுமெனப்
பங்கயாசனப்பரனுரைத்தலும்
துங்கவார்சிலைத்துணைநெடும்புயச்
செங்கண்வீரன்வெஞ்சினமொரீஇயினான்.

கதலிசூழ்பொழிற்கங்கைநாடனும்
மிதிலைமெல்லியல்பயந்தமென்னகைக்
குதலைமென்மொழிக்குசலவப்பெயர்ப்
புதல்வரைத்தழீஇவேள்விபுக்கனன்.

அமபுயத்திடத்தரிவையைப்புனை
அம்புயத்தில்வைத்தாளுமன்பினான்.
*வெம்பரித்தொகைவேதவேள்வியோர்
ஐம்பத்திற்றிரண்டவைமுடித்தனன்.

சேடனாயிரஞ்சிரமசைந்திடக்
கோடுலாமதிக்குழவியன்னகோட்
டோடையானையினும்பரேறியே
†ஆடன்மாவினனயோத்திமேவினான்.

தன்குடைக்கிடைத் ‡ தலமொரேழையும்
பொன்மெய்மாரியான்பொதுவறப்புரந்
தன்பர்சூழவாளரசர்போற்றநீ
டின்பமேநுகர்ந்தினிதுவைகினான்.

இராமனுக்கு வசிட்டன் மகுடந்தரித்தல்.

அரியணையநுமன்றாங்கவங்கதனுடைவாளேந்தப்
பரதன்வெண்குடைகவிக்கவிருவருங்கவரிவீச
விரைசெறிகுழலியோங்கவெண்ணையூர்ச்சடையன்றங்கண்
மரபுளோர்கொடுக்கவாங்கிவசிட்டனேபுனைந்தான்மௌலி.

---

* வெம்பரித்தொகை வேதவேள்வி — வேகத்தினையுடைய குதிரையை வேதமந்திரத்தாற்கொன்று செய்யும் யாகம்.

† ஆடன்மாவினான் — வெற்றித்திருவினையுடைய விராமன்.

‡ தலம் — பூமி.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

# சிறப்புப்பாயிரம்.

---

ஸ்ரீராமநாமாமிர்தப் பிரியர்களாகிய பக்த சிகாமணிகளே! இதை ஸ்ரீராமாயணப்பிரியர்கள் அனைவரும் எளிதில் நாடோறும் பஜித்து ஸ்ரீமந்நாராயணமூர்த்தியின் பாதாரவிந்தம் சேரும்படி ஸ்ரீ ராமாயணப் புஸ்தகமாக அச்சில் பதிப்பித்துள்ளோம்.

கவிச்சக்ரவர்த்தியாகிய கம்பநாட்டாழ்வார்
அருளிச்செய்துள்ள கவிகளும்,

மகாகவி ஒட்டக்கூத்தர்
அருளிச்செய்துள்ள உத்திரராமாயணக் கவிகளும்,

அருணசலக் கவி இராம நாடகக் கீர்த்தனையும்.

ஸ்ரீமத் கம்பராமாயணத்திற் பிரகாசிக்கும் கீழ்க்கண்ட அமுத கவிகளின் படி எண்ணி ராமநாமபஜனைசெய்து மோக்ஷவீடு அடையவேண்டுமாய்ப் பிரார்த்திக்கும் ஸ்ரீராமபக்தன்

**பூ. சா. கோ. வெங்கிடசாமி நாயுடு,**

**பூளைமேடு.**

---

**கவி**

அம்பராவணிசடையரனயன்முதல்
உம்பரான்முனிவரால்யோகராலுயர்
இம்பராற்பிணிக்கருமிராமவேழஞ்சேர்
கம்பராம்புலவரைக்கருத்திருத்துவோம்.

வேறு

நாரணன்விளையாட்டெல்லாநாரதமுனிவன்கூற
ஆரணக்கவிதைசெய்தானறிந்த [1] வான்மீகியென்பான்
சீரணிசோழநாட்டுத்திருவழுந்தூருள்வாழ்வோன்
காரணக்கொடையான்கம்பன் தமிழினாற்கவிசெய்தானே.

[2] அம்பிலே [3] சிலையைநாட்டியமரர்க்கன்றமுதமீந்த
தம்பிரானென்னத்தானுந்தமிழிலேதாலைநாட்டிக்
கம்பநாடுடையவள்ளல்கவிச்சக்ரவர்த்திபார்மேல்
நம்புபாமாலையாலேநாருக்கின்றமுதமீந்தான்.

எண்ணியசகாத்தமெண்ணூற்றேழின்மேற்சடையன்வாழ்வு
நண்ணியவெண்ணெய்நல்லூர்தன்னிலேகம்பநாடன்
பண்ணியவிராமகாதைபங்குனியத்தநாளில்
கண்ணியவரங்கர்முன்னேகவியரங்கேற்றினானே.

வேறு

இம்பர்நாட்டிற்செல்வமெல்லாமெய்தியரசாண்டிருந்தாலும்
உம்பர்நாட்டிற்கற்பகக்காவோங்குநிழலிருந்தாலும்
செம்பொன்மேருவனையபுயத்திறல்சேரிராமன்றிருக்கதையிற்
கம்பநாடன்கவிதையிற்போற்கற்றோர்க்கிதயங்களியாதே.

வேறு

[4] கழுந்தராயுனகழல்பணியாதவர்கதிர்மணிமுடிமீதே
அழுந்தவாளிகள்தொடுசிலைராகவவபிநவகவிநாதன்
விழுந்தனாயிறுவெழுவதன்முன்மறைவேதியருடனாராய்ந்
தெழுந்தனாயிறுவிழுவதன்முன்கவிபாடினதெழுநூறே.

பயன்

[5] நாடியபொருள்கைகூடும்ஞானமும்புகழுமுண்டாம்
வீடியல்வழியதாக்கும்வேரியங்கமலைநோக்கும்
நீடியவரக்கர்சேனைநீறுபட்டழியவாகை
சூடியசிலையிராமன்றோள்வலிகூறுவோர்க்கே.

---

[1] வல்மீகம் – புற்று. புற்றிலிருந்து கேட்டிருந்தனன் ஆதலானும் புற்றிலிருந்து வெளிப்பட்டானாகலானும் வால்மீகியெனக் காரணக்குறியாயிற்று.

[2] அம்பு – நீர். [3] சிலை – கல், மலை – மந்தரமலை. [4] கழுந்து- படைக்கலங்களிற் கைப்பிடியாற் றேய்ந்த இடம். இவ்வுவமையால் அறிவுதேய்ந்தவர் என்றவாறாயிற்று.

[5] நாடியபொருள் – கல்வி, செல்வங்கள்.

வேறு

நன்மையுஞ்செல்வமுநாளுநல்குமே
தின்மையும்பாவமுஞ்சிதைந்துதேயுமே
சென்மமுமரணமுமின்றித்தீருமே
இம்மையே [6] ராமவென்றிரண்டெழுத்தினால்.

இராகவன்கதையிலொருகவிதன்னிலேகபாதத்தினையுரைப்போர்
பராவருமலரோனுலகினிலவனும்பன்முறைவழுத்தவீற்றிருந்து
புராதனமறையுமண்டர்பொற்பதமும்பொன்றுநாளதனினும்பொன்றா
அராவணையமலனுலகெனும்பரமபதத்தினையணுகுவரன்றே.

இறுவரம்பினிராமவென்றோரும்பர்
நிறுவரென்பதுநிச்சயமாதலான்
மறுவின்மாக்கதைகேட்பவர்வைகுந்தம்
பெறுவரென்பதுபேசவும்வேண்டுமோ.

அன்னதானமகிலநற்றானங்கள்
கன்னிதானங்கபிலையின்றானமே
சொன்னதானப்பலனெனச்சொல்லுவர்
மன்னிராமகதைமறவார்க்கரோ.

ஆதியரியோநமநாராயணர்திருக்கதையறிந்தனுதினம்பரவுவோர்
நீதியனுபோகநெறிநின்றுநெடுநாளதினிருந்துசெகதண்டமுழுதுக்
காதிபர்களாயரசுசெய்துளநினைத்ததுகிடைத்தருள்பொறுத்து முடிவில்
சோதிவடிவாயழிவில்முத்திபெறுவாரெனவுரைத்தசுருதித்தொகைகளே.

இனையநற்காதைமுற்றுமெழுதினோர்வியந்தோர்கற்றோர்
அனையதுதன்னைச்சொல்வோர்க்கரும்பொருள்கொடுத்துக்கேட்போர்
கனைகடற்புடவிமீதேகாவலர்க்கரசாய்வாழ்ந்து
வினையமதறுத்துமேலாம்விண்ணவன்பதத்திற்சேர்வார்.

---

[6] ராமஎன்னு மிரண்டெழுத்தின் உச்சாரணத்தால் சகல துன்பமும்போய் நன்மையுண்டாகும், என்பதை கூறியவாறாயிற்று.

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்.

## காப்புகள்.

### நம்மாழ்வார் துதி.

தருகைநீண்ட [1] தயரதன்றன்றரும்
இருகைவேழத்திராகவன்றன்கதை
திருகைவேலைத்தரைமிசைச்செப்பிடக்
குருகைநாதன்குரைகழல்காப்பதே.

### அநுமான் துதி.

[2] அஞ்சிலேயொன்றுபெற்ற [3] னஞ்சிலேயொன்றைத்தாவி
[4] அஞ்சிலேயொன்றாறாகவாரியற்காகவேகி
[5] அஞ்சிலேயொன்றுபெற்றவணங்கைக்கண்டயலாரூரில்
[6] அஞ்சிலேயொன்றைவைத்தானவனெம்மையளித்துக்காப்பான்.

### சரஸ்வதி துதி.

[7] புத்தகம்படிகைமாலைகுண்டிகைபொருள்சேர்ஞான
வித்தகந்தரித்தசெங்கைவிமலையையமலைதன்னை
மொய்த்தகொந்தளகபாரமுகிழ்முலைத்தவளமேனி
மைத்தகுகருங்கட்செவ்வாயணங்கினைவணங்கல்செய்வாம்.

---

[1] தசரதன் — பத்துத்திக்கினும் தன்னிரதத்தைச் செலுத்தும் ஆற்றலுள்ளோன்.

[2] அஞ்சிலேயொன்று (பஞ்சபூதங்களிலொன்று) வாயு. [3] சமுத்திரம். [4] ஆகாசம். [5] பூமி. [6] நெருப்பு. [7] புத்தகம், படிகமாலை குண்டிகை, ஞானவித்தகம், என்பவற்றிற்கு முறையே, இடப்பாற் கீழ்க்கரம், வலப்பாற் கீழ்க்கரம், இடப்பால் மேற்கரம், வலப்பான் மேற்கரம் என்பன இடங்களாம்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்



ஹரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை.

கம்பநாட்டாழ்வார் திருவடிகளே சரணம்.

# ஸ்ரீமத்கம்பராமாயணம்

## சிறப்புப்பாயிரம்.

உலகம்யாவையுந்தாமுளவாக்கலும்
நிலைபெறுத்தலுநீக்கலுநீங்கலா
[1] அலகிலாவிளையாட்டுடையாரவர்
தலைவரன்னவர்க்கேசரணாங்களே.

சிற்குணத்தர்தெரிவருநன்னிலை
எற்குணர்த்தரிதெண்ணியமூன்றனுள்
முற்குணத்தவரேமுதலோரவர்
நற்குணக்கடலாடுதனன்றரோ.

ஆதியந்த [2] மரீயெனயாவையும்
ஓதினாரலகில்லனவுள்ளன
வேதமென்பனமெய்ந்நெறிநன்மையன்
பாதமல்லதுபற்றிலர்பற்றிலார்.

---

1 அலகிலா — அளவில்லாத.
2 அரியன எனப் பாடங் கூறுவாருமுளர்.

காப்பு.

வானின்றிழிந்துவரம்பிகந்தமாபூதத்தின்வைப்பெங்கும்
ஊனுமுயிருமுணர்வும்போலுள்ளும்புறத்துமுளனென்ப
[1] கூனுஞ்சிறியகோத்தாயுங்கொடுமையிழைப்பக்கோற்றுறந்து
கானுங்கடலுங்கடந்திமையோரிடுக்கண்காத்தகழல்வேந்தை.

தாயுரைகொண்டுதாதையுதவியதரணிதன்னைத்
தீய்வினையென்னநீத்துச்சிந்தனைமுகத்திற்றேக்கிப்
போயினையென்றபோழ்துபுகழினையதன்மைகண்டால்
ஆயிரமிராமர்நின்கேளாவரோதெரியினம்மா.

காப்பு.

பேதியாதுநிமிர்பேதவுருவம்பிறழ்கிலா
ஓதியோதியுணருந்தொறுமுணர்ச்சியுதவும்
வேதம்வேதியர்விரிஞ்சன்முதலோர்தெரிகிலா
ஆதிதேவரவரெம்மறிவினுக்கறிவரோ.

தனியன்.

தரலாற்றுங்கவிச்சக்கரவர்த்திசெய்யுடாளுழமுடைமைநோக்கி [ரும்
[2] வரலாற்றுமுறையின்மும்மைத்தமிழுணர்ந்தமுதியோருமற்றுளோ
முரலாற்றுங்கடற்பாரிற்கம்பசூத்திரமுதுசொன்மொழிபவன்றேற்
கொரலாற்றுமால்சங்கமொக்குமெனின்யாம்வேறுரைப்பியம்பலாமால்.

காப்பு.

மூன்றுருவெனக்குணமும்மையாமுதற்
றோன்றுருவெவையுமம்முதலைச்சொல்லுதற்
கேன்றுருவமைந்தவுமிடையினின்றவுஞ்
சான்றுருவுணர்வினுக்குவந்ததாயினன்.

---

[1] கூன் என்றது மந்தரையை ஆகுபெயர், சிறியகோத்தா என்றது கைகேசியை, கழல்வேந்தை என்றது சீராமனை.

[2] வரலாற்று முறையாவது அகத்தியன் வழிவந்த அருந்தமிழ்க் கலைகளை முதுமொழிப்பெரும்புலவர்மாட்டுப் புலமை நிரம்புங்காறும் பயிறல்.

காப்பு.

அலங்கலிற்றோன் றும்பொய்ம்மையரவெனப்பூதமைந்தும்
விலங்கிய [2] விகாரப்பாட்டின்வேறுபாடுற்றவீக்கம்
கலங்குவதெவரைக்கண்டாலவரென்பர்கைவிலேந்தி
இலங்கையிற்பொருதாரன்றேமறைகளுக்கிறுதியாவார்.

மும்மையாமுலகந்தந்தமுதல்வற்குமுதல்வன் றாதாய்ச்
செம்மையாலுயிர்தந்தாய்க்குச்செயலென்னுலெளியதுண்டே
அம்மையாயத்தனுயவப்பனேயருளின்வாழ்வே
இம்மையேமறுமைதானுநல்கினேயிசையோடென்றாள்.

முத்தமிழ்த்துறையின்முறைபோகிய
உத்தமக்கவிகட்கொன் றுணர்த்துவேன்
பித்தர்சொன்னவும்பேதையர்சொன்னவும்
பத்தர்சொன்னவும்பன்னப்பெறுபவோ.

நடையினின் றுயர்நாயகன்றோற்றத்தின்
இடைநிகழ்ந்தவிராமாவதாரப்பேர்த்
தொடைநிரம்பியதோமறுமாக்கதை
சடையன்வெண்ணெய்நல்லூர்வயிற்றந்ததே.

தாராதலத்திலுள்ளதமிழ்குற்றமெல்லாம்
அராவுமரமாயிற்றன்றே—இராவணன்மேல்
அம்புநாட்டாழ்வானடிபணியுமாதித்தன்
கம்பநாட்டாழ்வான்கவி.


என்னும் கவிகளிற் சொல்லிய துணர்ந்துய்வீராக.

என் இந்நூலில் கம்பநாட்டாழ்வார் கவியை எழுத வேண்டுமென்றால், ஸ்ரீராமசரிதத்தில் விசேடமான பொருளுடைய கவிகளாகையாலும் வடமொழியைச் செந்தமிழாற்பாடி இவ்வுலகுய்யும்படிக்குச்செய்த பெரியார்பெயரும் இதில் இருக்கவேண்டுமென்ற அவாவினாலும் எழுதப்பட்டது.

---

2 விகாரப்பாட்டின் வேறுபாடு—அறுவகை விகாரப்படுதலுடைய தேவமனுஷ்ய திரியக்ஸ்தாவர வேறுபாடு. அவையாவன: ஊறுபடவொன்றிலே பிறத்தல், பிறந்துளவாதல், வேறுபடவளர்தல், வளர்ந்தயலொன்றாய் விளைந்தமைத்தல், மாறுபடத்தேய்தல், அறமாய்தல்.

ஸ்ரீ



அருணாசலக் கவி

# இராம நாடகக் கீர்த்தனைகள்.

## அனுமார் தோத்திரம்.

நேரிசைவெண்பா.

கோதண்டதீக்ஷா குருராமநாடகத்தைத்
தீதண்டாதாறடியேன் செப்பவே — கோதண்டா
மாருதியே அஞ்சனையாள் மைந்தனே நற்கருணை
வாருதியே நீதுணையா வா.

கலியாணிராகம் — ரூபகசாப்புதாளம்.

பல்லவி.

துணைவந்தருள்புரிகுவாய் அனுமந்தாநீ*
துணைவந்தருள்புரிகுவாய்

அநுபல்லவி.

துணைவந்தருள்வாய்நல்ல சொல்லப்பொருளதுபுல்ல
இணையொன்றிலாதவல்ல ராமநாடகம்சொல்ல (துணை)

---

* இந்தப்பல்லவியை இரட்டித்துப்பாடும்போது 'அனுமந்தாநீ' என்கிறதற்குப்பிரதியாக 'என்றனக்குற்ற' என்றும் 'எனக்குப்பக்கம்' என்றும் சொல்லிக்கொள்ளவும்.

சரணங்கள்.

1. துஷ்டவாலிதோழமையை விண்டோனே—விண்டு
சுக்கிரீபன்தோழமையைக் கொண்டோனே—வெகு
திட்டமாரகவனைப்போய்க் கண்டோனே—அவன்
செப்பியசொல்அமுர்தத்தை உண்டோனேசுக்கிரீவன்
கஷ்டமும் அரசிழந்த
நஷ்டமும் அவன் இருப்பும்
சட்டமாச்சொன்னமாருதி
இஷ்டகருணைவாருதி (துணை)

2. அஷ்டதிக்கில்த்தென் திசை உகந்தோனே—சீதைக்காய்
அரியபிலத்தினுள்ப்பு குந்தோனே—அப்போது
பொட்டெனப்பூமியினைப்பி ளந்தோனே—உயிரைப்
போக்கவேமிகமனம்த ளர்ந்தோனே—சம்பாதி
எட்டவே இருந்துமெள்ள
கிட்டவே வரஅவற்குப்
பட்டதைச் சொல்லும்தூயனே
முட்டிலா ஆஞ்சநேயனே (துணை)

3. உக்கிரமாவிஸ்வசொரூபம் எடுத்தோனே—மயேந்திரத்
துதைந்துகடலைத்தாண்டி விடுத்தோனே—பொல்லாத
அக்கிரமலங்கணியைக்கீழ்ப் படுத்தோனே—நற்திரு
ஆவியைத்தேவிகையினில்க் கொடுத்தோனே—ஆறுபோல்
மிக்கவேரத்தங்கள்வாயால்
கக்கவே ராட்சதர் எல்லாம்
மக்கவே செயும்ருத்திரனே
முக்கியமாம் வாயுபுத்திரனே (துணை)

4. தேவிசூடாமணிகையில்த் தரித்தோனே—சொன்ன
சேதிகள்எல்லாம்அங்கி கரித்தோனே—படு
பாவிராவணன் லங்கையை எரித்தோனே—ராமன்
பக்கல்வந்துற்றசேதிகள் விரித்தோனே—இந்த

பூவுலகத்தோரும்தேவர்
கோவும்முனிக்கணமும்ப
ராவியசிரஞ்சீவியே
மேவிய எனதாவியே (துணை)

5. அருமையாம்சஞ்சீவிமலையை ஏற்றோனே—பிர்ம்ம
அஸ்திரவேதைகள்எல்லாம் தீர்த்தோனே—சீதையை
உரிமையாயராகவன்பக்கல் சேர்த்தோனே—பரதன்
உயிரைவிடுமுன்னமேபோய்க் கார்த்தோனே—தவத்தில்
பெருமையார்முனி—விருந்தனில்
தருமராமனோ—டருந்தின
ஒருமையார் சஞ்சீவி—ராயனே
பிரமபட்டம்பொறும்—உபாயனே (துணை)

---

## பெருமாள் தோத்திரம்.

### விருத்தம்.

அண்டர்தம்துயரம்தீர அயோத்திமாநகரில்வந்து
தண்டகாரணியம்சென்று சமுத்திரமீதணையைக்கட்டிக்
கொண்டுராவணனைமாட்டக் கோதண்டம்கையில்ஏந்தும்
புண்டரீகக்கண்ணன்ராம பொன்னடிக்கமலம்போற்றி.

சௌராஷ்டிராகம் — திரிபுடைதாளம்.

பல்லவி

எனக்குன் இருபதம்நினைக்கவரம்அருள்வாய் — ஸ்ரீராமச்சந்திரா
எனக்குன் இருபதம்நினைக்கவரம் — அருள்வாய்

சரணங்கள்

1. எனக்குன் இருபதம்நினைக்கவரம்அருள்
இனித்ததசரதன்—தனக்குமகன்எனும்
மனத்தினுடன் அவ—தரித்துமுனிவரன்
மகத்தில்அரக்கியை—வதைத்தஅரசே (எனக்கு)

2. நடக்கையிலே அகலிகைக்குக்—கிருபைசெய்து
நடத்திச்சனகன்வில்—ஒடித்துச்சனகிகை
பிடித்துப்பரசுரா—மனுக்குமமதையைப்
பிரித்துநகரில்வந்—திருக்கும்அய்யனே (எனக்கு)

3. தரிக்கும்முடிபர—தனுக்குதவிநதி
தடத்தில்க்குகனுடன்—அடுத்துச்சித்திரகூட
வரைக்குள்ச்சனகியோ—டிருக்கத்துணைவன் நல்
வணக்கம்செயமகிழ்குணக்குஞ்சரமே (எனக்கு)

4. துடித்தபரதனும்—ஒடுக்கமுடன்வரத்
தொடுத்தமிதியடிகொடுத்தரசுசெய
வடக்கில்அவனையும்—விடுத்துநடுவிலே
வனத்தில்வரும்விரா—தனைக்கொன்றவனே (எனக்கு)

5. விடுக்கரியசடா—யுவுக்குறவுசொலி
விடுத்துக்கொண்டுபஞ்ச—வடிக்குச்சென்றவுடன்
அடுத்தசூர்ப்பநகி—கொடுத்தகரதூ
ஷணத்திரிசிரர்முடி—துணித்தராகவா (எனக்கு)

6. தனித்துவருமாரீ—சனைக்கொன்றொருகவந்
தனுக்கருளிஅனுமனைக்—கொண்டொருசுக்கிரீ
வனுக்குதவிவாலி—தனைப்பொருதிவா
னரப்படையை—ஆதரித்ததுரையே (எனக்கு)

7. இருக்கும்அனுமன்வந்—துரைக்கநிசிசரர்
இருக்கைஅறிந்தபின்—எரித்தகடலிலே
பெருக்க அணைசெய்து—வருக்கம்வருக்கவவருக்கமா
பெலத்தஅரக்கரைத்—தொலைத்ததெய்வமே (எனக்கு)

8. கொடியஇந்திரசித்தன்—பிரகஸ்தன்முதலாகக்
கொள்ளுமூலபல—வெள்ளஅரக்கர்தம்
முடியும்கும்பகர்னன்—முடியும்ராவணன்
முடியும்பொடியாக—விடுபுங்கவனே (எனக்கு)

9. நினைத்தபடிவிபீஷணர்க்கரசுபெற
 நிறுத்திஒருபுஷ்ப-ரதத்தில்ஏறிவந்து
தனத்தில்உயர்தரும்-அயோத்தியிலேகிமா
 தனத்திருக்கும்ரகு-குலக்குமரனே (எனக்கு)

---

## மங்களம்.

### விருத்தம்.

மூவருக்கும்தேவியர்க்கும் தேவரோடு
 முனிவருக்கும்முன்னிந்தக் கதையைச்சொன்ன
நாவருக்கும்தசரதர்க்கும் தேவிமார்க்கும்
 நற்றம்பிமார்களுக்கும் சீதையோடு
ஆவருக்கும்கோவருக்கும் அனுமான்மற்றோர்
 ஆழ்வார்கள் ஆரியர் ஐம்படைஅனந்தன்
மாவருக்கும்இதைப்படிப்போர் கேட்போர்க்கெல்லாம்
 வளம்சொல்வான்ராகவன் மங்களம்சொல்வேனே.

அசாவேரிராகம் — ஆதிதாளம்.

### பல்லவி.

ஸ்ரீராமச்சந்திரனுக்கு செயமங்களம்—நல்ல
திவ்வியமுகச்சந்திரனுக்கு சுபமங்களம்

### அநுபல்லவி.

மாராபிராமனுக்கு மன்னுபரந்தாமனுக்கு
ஈராறுநாமனுக்கு ரவிகுலசோமனுக்கு (ஸ்ரீ)

### சரணங்கள்.

1. கொண்டல்மணிவண்ணனுக்குகண்ணனுக்கு மங்களம்
 கோசலைகுமாரனுக்குவீரனுக்கு மங்களம்
  புண்டரீகத் தாளனுக்கு
  பூச்சக்கிர ஆளனுக்கு
  தண்டுளவத் தோளனுக்கு
  சானகி மணாளனுக்கு (ஸ்ரீ)

2. கோவைமணிவாயனுக்குமாயனுக்கு மங்களம்
கோதண்டகையனுக்குமெய்யனுக்கு மங்களம்
தாவுகுண சீலனுக்கு
சத்திய விசாலனுக்கு
தேவர்அனு கூலனுக்கு
தெசரதன் பாலனுக்கு (ஸ்ரீ)

3. பகிரண்டநாதனுக்கு வேதனுக்கு மங்களம்
பரதனும்அன்பனுக்கு முன்பனுக்கு மங்களம்
சசலஉ லாசனுக்கு
தருமந்த காசனுக்கு
அகலவி லாசனுக்கு
அயோத்தியா வாசனுக்கு (ஸ்ரீ)

---

## ஸ்ரீராமர்வரவை அனுமார் பரதருக்குக்கூறல்.

விருத்தம்.

தந்தாய்கௌசலைவந்தாளொடு பரதன்பாடுகள் இவைமுன்கூறி,
கொந்தார் அனலைவலம்சூழ்பொழுதுகுழந்தாய்குழியில்அமிழ்ந்தாதே
அந்தோபொறுபொறுமைந்தாபொறுபொறுஅன்பால்உனதுமுகம் தேடி;
வந்தான்ரகுபதிவந்தான் என்அனுமன்தான்இஃதுரைதந்தானே.

மத்தியமாவதிராகம் — அடதாளசாப்பு.

பல்லவி.

வந்தான்வந்தான்பரதா—ரகுராமன்—வந்தான்வந்தான்பரதா

அநுபல்லவி.

வந்தான்வந்தான்மோதிரம் தந்தான்தந்தான்கைமேல்
இந்தாஇந்தாதீயினில் முந்தாதேமுந்தாதே (வந்)

சரணங்கள்.

1. நாயகன்சொல்மறந்தாய் அண்ணா என்று பேயனைப்போல்பறந்தாய்
தாயரையும்துறந்தாய்ப்பழிபோட நீ இதற்கோபிறந்தாய்
சேயின்முகம்பார்க்கும் தாயின்முகம்போல
காயும்புழுவுக்குச் சாயும்நிழல்போல
தீயும்பயிருக்கும் பேயும்மழைபோல
மாயன்கஜேந்திரனுக் காய்வந்ததுபோல (வந்)

2. பொருந்தாதபுத்திதந்தாய் ஆலைவாயில்கரும்புபோல்மெத்தநைந்தாய்
துரும்புபோல்வற்றிநொந்தாய்வீழ்வேன்என்றுபெருந்தீயைசுற்றிவந்தா
அருபதினல்ஆண்டு ஆச்சென்றதினாலே
வருந்தும்தம்பிமடி வான்என்றொருகாலே
பரிந்திதோசித்திர கூடத்துக்கிப்பாலே
பிரிந்தகன்றைத்தேடித் திரும்பும்பசுவைப்போலே (வந்)

3. தீமைவினைகள்மண்டு இராவணப் பாமரன் ஆவிஉண்டு
சேமவெஞ்சேனைகொண்டு பரத்துவாசமாமுனிபூசைகண்டு
சாமிரகுகுல சோமன் இதோவந்தான்
பூமகள்சானகி வாமன் இதோவந்தான்
ஓம்மன்னும் ஆயிர நாமன் இதோவந்தான்
நீ மறவாரகு ராமன் இதோவந்தான் (வந்)

---

## பரதருக்கு அனுமார் சங்கிரக ராமாயணம் கூறல்.

சந்தவிருத்தம்.

இந்தவாறனுமந்தன் ஓதி இடும்பகைமோதிரம்ஈந்துடன்
சந்தமாமுடிகொண்டதோர் பரதன்கணாரவளர்ந்தனன்
உந்தனோடுபிரிந்துராமன்ஒழிந்ததும்பின்நடந்ததும்
வந்தவாறும்அறிந்திடனென்றுரு மாறினன் இவைகூறினன்.

கலியாணிராகம் — அடதாளசாப்பு.

## பல்லவி.

பரதமகராசனேகேளாய்—ராமன்சேதி—பரதமகராசனேகேளாய்

## அநுபல்லவி.

திரம்உலாவியசித்திர கூடத்திலேமுன்னே
திருவடிகள்நீகொண்டு போகியஅதின்பின்னே
இரகுபதிதண்டகவ னத்தில்அடிநீட்டினன்
ராட்சதவிராதனை உபேக்ஷையறமாட்டினன் (பரத)

## சரணங்கள்.

1. அந்தமுனிவர்க்கபயம் ஈந்தான்—பிறகு
அகஸ்தியமுனி ஆசிரமம்சேர்ந்தான்—அவன்
தந்தைபடைமுழுவதும் கொண்டான்—வந்து
சானகியொடுபஞ்சவடி கண்டான்
வந்தசூர்ப்பநகியவள் வாதாடும்நாளிலே
வள்ளல்இளையவன் அங்கை மீதாடும்வாளிலே
கந்தமுலையும்செவியும் நாசியும்நறுக்கினன்
கரதூஷணரையும்அவ ளாலேநொறுக்கினன் (பரத)

2. பின்னுகமானவர விடவே—அதின்
பிறகுகணைஒன்றில்அது படவே—ஒரு
சன்னுசிராவணன் அடுத்தான்—சீதை
தன்னைநிலமங்கையோ டெடுத்தான்
அந்நிலையிலேவரு சடாயுவைவருததினன்
அம்மனை அசோகவனக் காவலில்இருத்தினன்
கன்னிகைதனைச்சாமி தேடிமனம்தேங்கினன்
கழுகரசனைக்கண்டு கவந்தன்உயிர்வாங்கினன் (பரத)

3. சவரிசொல்லியவழு நடந்தான்—என்
தனை அடிமையாகவே தொடர்ந்தான்—பின்
கவடுளமரங்கள் துணி செய்தான்—அந்த
காலன்வாலியையும்விழ எய்தான்
அவனியைச்சுக்ரீவ னுக்குதவிமீளவும்
அடியேன்அறிந்தம்மை நிலைகண்டுமீளவும்
தவம்உளவிபீஷணர்க் கபயம்கொடுத்தனன்
சாமிதிருவணைஒன்று கடல்மேல்எடுத்தனன் (பரத)

4. பண்டைலங்கையின்மதில் பிடித்தான்—எழு
பதுவெள்ளமும்கொண் டிடித்தான்—வெகு
கண்டகஅரக்கரை மடுத்தான்—பயிர்க்
களைஎடுத்ததுபோல் எடுத்தான்
அண்டர்பணிதம்பியும்நெ டுங்கணைகள் தாக்கினன்
அதிகாயனையும் அந்திர சித்தையும்மண் ஆக்கினன்
கொண்டல்மணிவண்ணனும் சிலைகணை முடுக்கினன்
கும்பகர்னனையும்ரா வணனையும்ஒடுக்கினன் (பரத)

5. மதிநுதல்ச்சீதைதனை உற்றான்—அங்கே
வந்ததசரதன்வரம் பெற்றான்—தனது
பதியில்வரவேஉளம் மதித்தான்—புஷ்
பகமீதில்சேவடி பதித்தான்
எதிர்படும்காடும்நாடும் கண்டுதாண்டினன்
இமையவர்புரந்தரா திகள்புகழவேண்டினன்
அதிமுனிபாரத்துவாசன் ஆசிரமம்மேவினன்
அதற்குமுன்உன்னைக்காண அடியேனைஏவினன் (பரத)



# கரிவரதராஜப் பெருமாள் தோத்திரக் கீர்த்தனை.

தஸ்குமா ரேதும் ரெகுவாலா — என்ற இந்துஸ்தான் மெட்.

பல்லவி.

கரிவரத ராசர்திருக் கழல் பணிந்திடுவோம்—கதியருள் — கரி

அநுபல்லவி.

கரியழைக்க ஓடிவந்து கயத்திற் கராவைக்கொன்ற
அரிமுகுந்தா நாராயணா ஆதிமூல சோதியென்று — கரி

சரணம்.

பக்தியாய் நாமுங்கூடிப் பரந்தாமன் பஜனைபாடி
முத்தி வைகுந்தம் நாடி முகுந்தனருள் தேடியாடி — கரி

பண்டரி புரத்தில்வாழும் பாண்டு ரங்கவிட்டலுக்கே
தொண்ட ரெல்லோருங்கூடித் துளபஞ்சூடித் தொழுதுபாடி—கரி

கிருஷ்ண ராசபுரமெனமுன் கீர்த்திபெற்ற முத்திநகர்
திருஷ்டாந்தம் விளங்கநாளும் திருவருள் செய்திலங்கச்செய்யும் (க)

பூவுலகோர்புகழும் பூனாமாநகர்வாழும்
கோவிந்தசாமியுளங் குடிபுகுந்து அருள்புரிந்த — கரி

ரங்கவிலாச மில்லில் லக்ஷ்மியை விளங்கச்செய்து
வெங்கடசாமி தினம் வேண்டிடவந்தாண்டருளும் — கரி

தருமசாஸனக் கொடியும் சர்வஜன ஹைஸ்கூலும்
திருமாலுலகம்போல சீர்பிறங்கத் திருவளிக்கும் — கரி

கழனியிற் செந்நெல்வளங் கதித்தோங்குந் தாரைநகர்
பழனிமலையருட்கவியைப் பாடினோர்க்குவீடளிக்கும் — கரி

# வாழிக் கீர்த்தனை.

அடதாளம்.] [இராகம் — பியாகு.

கார்த்திகா நித்யகல்யாண — என்றமெட்டு.

பல்லவி.

வாழிவா ழியவாழியநீடூழி வாழிவாழிய வாழியவே

அநுபல்லவி.

ஆழிமேல் வடவாலிலைமேலரா வாழிமேலிளை யாள்மடிமேல்
வாழிபா டவளருந்திருவடி வாழி வாழிய வாழியவே — வாழி

சரணம்.

சங்குவாள் கதைகோதண்டமும் ஜெயசக்கரமும் பொற்பீதாம்பரமும்
கொங்குசேர்வனமாலிகையும் திருக்கோகனநாபிவாழயனும் — வாழி

பூமிநீ ளைபூந்திருவும் தாளிற் பொருந்திவாழ்கின்ற ஜானவியும்
நாமிகுந்தோதுநாலாயிரமும் எங்கள் நாயனர்சொன்னதிருக்குறளும்
ஏறும்பேரடியேவல்செய்சிற்றடி எண்ணரியவரிபக்தரடி
நீறும்நாமமும் ஏகமென்றேநெஞ்சில் நினைந்தமெஞ்ஞானிகள் பொன்
[னடியும் — வாழி

சங்கரன்முதற்றேவர்களும் சைவசமையகுரவர்கள் நால்வர்களும்
தங்கவேலைநினைந்தபோதென்னுளம் தங்கிவாழ்குகன்பொன்னடிரும் —
மாவிந்தமாநகர்போலிலங்கும் பூனைமாநகரிற்கல்விவாழவைத்த
கோவிந்தசாமியின் புத்ரர்பௌத்திரர் கோத்திரமுந்தங்கள் சீர்த்
[திரமும் — வாழி

தர்மசாஸனம் ரங்கவிலாசமில் சர்வஜனஹைஸ்கூலும் வாழியவே
பூ. சா. கோ. அறநிலய அச்சகமும் வாழியவே — வாழி
மன்னர்வாழி மறைவாழி யிந்த மானிலம்வாழி பழனிமலை
சொன்னபாக்களைக்கற்றவர்கேட்டவர் தூயவைகுந்தத்தில் வாழியவே
— வாழி

(முற்றிற்று)

TAMIL NADU ARCHIVES